# இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன். ஏசா 29 : 4

**"ஒரு அதிசயத்தைச் செய்வேன்"**

இதை வாஞ்சையுடன் வாசிக்கும் என் அன்பு நண்பரே, **"ஒரு அதிசயத்தைச் செய்வேன்"**என தேவன் **ஏசா.29:14**–ல் கொடுத்த வாக்குத்தத்தை நம்பி கர்த்தரைத் துதிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். இந்த மாதத்தில் **ஒரு அதிசயத்தை உங்கள் வாழ்வில் காண்பீர்கள்.**

கர்த்தருடைய தூதனானவர், மனோவாவின் மனைவிக்கு தரிசனமாகி, இதோ, பிள்ளை பெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய் என்றார். அப்பொழுது மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, ஆ என் ஆண்டவரே. நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன், மறுபடியும் ஒரு விசை எங்களிடத்தில் வந்து பிறக்கப் போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்கு கற்பிப்பாராக என்றார். தேவன் மனோவான் சத்தத்துக்கு செவி கொடுத்தார். தூதன் மறுபடியும் தரிசனமானார்.

அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி, நீர் சொன்ன காரியம் நிறைவேறும் போது, நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி உம்முடைய நாமம் என்ன என்று கேட்டான். **"அது அதிசயம்"** என்றான்.

**ஏசாயா 9 : 6 சொல்கிறது:**

நமக்கு ஒரு பாலகன் பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; ''அவர் நாமம் அதிசயமானவர்'' என்பதாக.

**எரேமியா 32 : 17 சொல்கிறது**

**உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை**–என்பதாக.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, சாராள் நகைத்து நான் கிழவியாயிருக்கப் பிள்ளை பெறுவது மெய்யோ என்று சொல்வானேன்? **கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?** உற்பவ காலத் திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன். **அப்பொழுது** சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்பதாக அல்லேலுயா.

யோபு 5:9 சொல்கிறது, **ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்** என்பதாக.

**சங்கீதம் 136 : 4 சொல்கிறது**

**ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது** என்பதாக.

**எரேமியா 32 : 27 சொல்கிறது நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?** என்பதாக

என் அன்பு சகோதரனே, சகோதரியே, இதுவரையிலும் கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் செய்த அதிசயங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். எத்தனையோ காரியங்களை **நடக்காது என்று நினைத்தீர்கள்! நடக்கவில்லையா? முடியாது என்று நினைத்தீர்கள்! முடியவில்லையா?**

வேதம் சொல்கிறது, **மனுஷரால் இது கூடாதது தான். ஆனால் தேவனாலே எல்லாம் கூடும்** என்பதாக.

உன்னால் முடியாது. ஆனால் தேவனால் முடியும். ஆதலால் நீங்கள் கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு.

எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல, ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. என்பதாக அல்லேலுயா.

**மீகா 7 : 15 சொல்கிறது,**

நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போல **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்** என்பதாக.

என் அன்பு சகோதரனே. சகோதரியே இந்த மாதத்தில் கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் ஒரு அதிசயத்தைச் செய்யும்படியாக ஒரு இரகசியத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாப மாக்குங்கள். அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரஸ்தாபப் படுத்துங்கள். அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணி அவருடைய அதிசயங்களை யெல்லாம் தியானித்துப் பேசுங்கள். அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள். **1 நாளா. 16 : 8,9**

அவர் செய்த அதிசயங்களையும் அவருடைய அற்புதங்களையும் அவருடைய வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவு கூருங்கள். **1 நாளா. 16 : 13.**

ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள். **1 நாளா. 16 : 24.**

**ஒரு அதிசயத்தைச் செய்வேன்**